பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 155

புதன்கிழமை
30 ஏப்ரல் 2025

சித்திரை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மே 3 நள்ளிரவுடன் பரப்புரைகள் முடிவு

கொழும்பு, ஏப். 30
உள்ளூராட்சித் தேர்தலுக்கான பரப்புரைகள் மே மாதம் 3ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வரும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 15

## பலாலிக்கு மீண்டும் பேருந்து!

விரிவு பக்கம் 03

## இலங்கைக்கு வருகின்றார் சீன அமைச்சர்

விரிவு பக்கம் 02

அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக

# சட்டமா அதிபரிடம் பட்டலந்த அறிக்கை

**கொழும்பு, ஏப்ரல் 30**

**பட்டலந்த வதைமுகாம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** 15

கனேடிய நாடாளுமன்றத் தேர்தல்

## இரு ஈழத்தமிழர்கள் அபாரமான வெற்றி!





ஒட்டாவா, ஏப். 30
கனேடியப் பொதுத்தேர்தலில் இரண்டு ஈழத்தமிழர்களான முன்னாள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் யுவனிதா நாதன் ஆகிய இருவரும் வெற்றிபெற்றுள்ளனர்.
கனடாவின் பொதுத்தேர்தலில் இம்முறை ஆறு தமிழர்கள் போட்டியிட்டனர். அவர்களில் லிபரல் கட்சியின் சார்பில் 15

## இந்தியாவுடனான ஒப்பந்தம் விரைவில் நாடாளுமன்றில்!

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30
இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
இந்தியாவுடன் 15

## காலிமுகத்திடலில் அரசியல் நிகழ்வா?

கொதிக்கின்றார் ரணில்

கொழும்பு, ஏப். 30
காலிமுகத்திடலை அரசியல் நிகழ்வுக்குப் பயன்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய அரசாங்கம் அந்த வாக்குறுதியை மீறியுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி 15



இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட

## 500 கிலோ மஞ்சள் மண்டைதீவில் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்ட 500 கிலோ மஞ்சள் மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தக 15



பூச்சாண்டி புராணி

'கங்கைகொண்டு கடாரம் வெண்டு இப்ப கனடா வரைக்கும் கொடி பறக்குது பாருங்கோ'

## மே 15ஆம் திகதியன்று செம்மணியில் அகழ்வு!

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ்ப்பாணம் - செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில், மே மாதம் 15ஆம் திகதியன்று அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் 15

உள்ளூராட்சித் தேர்தல்

## நிறைவுக்கு வந்தது தபால்வாக்களிப்பு!


கொழும்பு, ஏப். 30
உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று மாலை 4 மணியுடன் நிறைவுக்கு வந்துள்ளது. 15

பருத்தித்துறைக் கடற்பரப்பில்

## கைப்பற்றப்பட்டது 338 கிலோ கஞ்சா



யாழ்ப்பாணம், ஏப். 30
பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து 338 கிலோ கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது என்று 15



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்
யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.
பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT
ashok STEEL
நீடித்த வலிமை
மத்திய மாகாணம் - 0773825632
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3
ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT
SIS 375



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4058 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 21 33 43 44 |
| விசேட எழுத்து | G |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1125 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 14 22 59 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0084 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 4 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2164 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 04 07 15 40 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5816 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 7 1 1 8 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1846 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 05 09 61 73 |
| விசேட எழுத்து | Y |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0391 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 1 8 |

### யாழ். பல்கலைக்கழகத்துக்கான

# ஊடகக்கல்லூரியின் வளாகத்தை படையினரிடமிருந்து விடுவிக்குக

**யாழ்ப்பாணம், ஏப். 30**

**மாமனிதர் தராகி சிவராமால் கிளிநொச்சி அறிவியல் நகரில் அடிக்கல் நடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இராணுவத்தினரது ஆக்கிரமிப்பிலுள்ள ஊடகக்கல்லூரி வளாகத்தை விடுவித்து அதனை யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் தனி அலகாகக் கொண்டுவந்து ஊடகக் கற்கைபீடமாக தொடர்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று யாழ். வடமராட்சி ஊடக இல்லம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெற்ற சகல ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவதன் மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் முன்வரவேண்டும்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் துப்பாக்கிமுனையில் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல்கள், காணாமற்போதல்கள், கைதுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ் ஊடகத்துறையை அச்சுறுத்தி அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த முனைப்புகள் தற்போதும் புதிய வடிவங்களில் தொடர்ந்தே வருகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும் - என்றுள்ளது.

(ச-25.33, 27.100)

## வங்கியில் பணத்தை வைத்திருப்பதே குற்றம்

### ரணில் விளக்கம்

கொழும்பு, ஏப்.30

ஊவா மாகாணசபையின் நிதியை வங்கி யில் இருந்து எடுத்து, அதைத் தொடர்ச்சியான அல்லது மூலதனச் செலவினங்களுக்குச் செலவிடுவது குற்றமல்ல என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, ஊவா மாகாணசபை நிதியை வங்கியில் இருந்து திரும்பப் பெற்றமை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக ரணில் விக்கிரமசிங்க ஆணைக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்தார்.

ஆணைக்குழுவில் மூன்று மணி நேரம் வாக்குமூலம் அளித்த பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் ஆணைக்குழு விடம் ஒரு வாக்குமூலம் அளித்து எனது கருத்தை விளக்கினேன், வங்கிக் கணக்கில் நிதியை வைத்திருப்பதுதான் உண்மையான குற்றம் என்று நான் கூறினேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## இலங்கை வருகின்றார் சீன வர்த்தக அமைச்சர்

கொழும்பு, ஏப்.30

இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில், சீன வர்த்தக அமைச்சர் வாங் வெண்டோ இலங்கைக்கு வரவுள்ளார். எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்கு வரவுள்ள சீன வர்த்தக அமைச்சர், சீன-இலங்கை வர்த்தக உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

சீன -இலங்கை வர்த்தக உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்கள் பத்து வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தநிலையில், 2018ஆம் ஆண்டு கலந்துரையாடல்கள் தடைப்பட்டிருந்தன. அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சீனாவுக்குச் சென்றிருந்தபோது இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடியிருந்தார். (எ-6)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0524 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 6 3 2 9 2 8 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2790 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 14 20 54 57 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 12 51 77 79 |
| வெற்றி வாரம் | 4951 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0672 |
| வெற்றி இலக்கம் | 21 37 47 |

**லக்ன ராசி DLB**


| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சிம்மம் | |
| வெற்றி இலக்கம் | 06 11 16 34 |
| சீட்டிழுப்பு வாரம் | 4502 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கம் | 16 36 39 51 |
| வெற்றி வாரம் | 1966 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 29.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 06 07 57 71 |
| வெற்றி வாரம் | 2616 |



## தமிழ்த் தேசியப் பேரவையினர் அராலியில் தீவிர பரப்புரை!





யாழ்ப்பாணம், ஏப். 30

உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பேரவையினர் நேற்று அராலி, தொல்புரம் பகுதிகளில் தீவிரமான பரப்புரையில் ஈடுபட்டனர்.

அராலி மத்தி, அராலி மேற்கு ஆகிய வட்டாரங்களுக்கான பரப்புரைகள் வேட்பாளர்களான ஜெயபவானி, தனதீஸ்வரன் ததீஸ்கரன் ஆகியோரது ஏற்பாட்டில் நடைபெற்றன. தொல்புரம் ஐந்தாம் வட்டாரத்துக்கான பரப்புரைகள் வேட்பாளர் வரதராஜா விதுஷனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றன.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், சட்டத்தரணி காண்டீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை தொகுதி செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பரப்புரையில் கலந்து கொண்டனர். (ம-125)

## மின்கட்டணத்தை அதிகரிக்க வலியுறுத்தும் நாணயநிதியம்

கொழும்பு, ஏப்.30

சர்வதேச நாணயநிதியத்தின் நான்காவது கடன் தவணைக்காக சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த நிபந்தனைகளில் மின்சார உற்பத்தி செலவை அடிப்படையாகக்கொண்டு மின்சார விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் அடிப்படை ஒப்பந்தத்தின்படி ஆரம்பக் கணக்கு இருப்புப் பேணப்படவேண்டும் என்றும், இந்த நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னர் நான்காவது கடன்தவணை தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 35 வருடங்களின் பின்னர் பஸ் சேவைகள் ஆரம்பம்

**கொழும்பு, ஏப்.30**

**யாழ்.மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையால் நீண்டகாலத்துக்குப் பின்னர் இரண்டு வழித்தடங்கள் ஊடாகப் புதிய பேருந்துச் சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

போர் காரணமாக கடந்த 35 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட குறித்த பகுதியூடாக பொதுமக்கள் நடமாடமுடியாத சூழல் காணப்பட்டது.

இதன்காரணமாக பயணிகள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவரை மாத்திரமே பயணம் செய்துவந்தனர். கடந்த 10ஆம் திகதி நிபந்தனைகளுடன் பலாலி வீதி விடுவிக்கப்பட்ட நிலையில் காங்கேசன்துறை-பலாலி இடையிலான அரச பேருந்துச் சேவை 35 வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மானிப்பாய், ஆலங்குளாய், அளவெட்டி ஊடாகத் தெல்லிப்பழையைச் சென்றடையும் பேருந்துச்சேவையும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-66-125)


## வெளிநாட்டு பணியாளருக்கு அரசாங்கத்தால் சலுகைகள்

கொழும்பு, ஏப்.30

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடுகளில் பணிபுரிந்துவிட்டு நாடு திரும்புவோருக்கு பல்வேறு சலுகைகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் நாடுதிரும்பிய பின் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடவுள்ளோருக்கு பத்து இலட்சம் ரூபா ம்சுயதொழில் முயசியில் ஈடுபட விரும்புவோருக்கு ஒன்றரை இலட்சம் உதவித் தொகையும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் பிள்ளைகளின் பாடசாலை கல்விக்கென பத்தாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

முந்நூறு டொலருக்கு குறைந்த சம்பளம் பெற்ற ஊழியர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொண்டு வரும் பட்சத்தில் அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. (ச-6)



## த.தே.மக்கள் முன்னணியினர் மன்னார் ஆயருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையைத் தமிழ்த்தேசியமக்கள் முன்னணியினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். (ச-66)

## மகேஷ் கம்மன்பில மறியலில்

இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவரும் ஊவா மாகாண பிரதம செயலாளருமான மகேஷ் கம்மன்பில ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விவாசாய அமைச்சின் பிரதிச் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் சீன நிறுவனமொன்றிடமிருந்து இயற்கை உரம் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக்கூறப்படும் மோசடி தொடர்பாகவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது சந்தேகநபரை மே 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச-6)

## மேம்பாலக்கட்டுமானம் நிறுத்தம்; ரூ.400 மில்லியன் அரசுக்கு நட்டம்

கொம்பனித் தெருப்பகுதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மேம்பாலத்தின் கட்டுமானப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதால் ஒப்பந்தகாரருக்கு அரசாங்கம் 400 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையைச் செலுத்தவேண்டியுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, கொம்பனித் தெருப் பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ள மூன்று மேம்பாலங்களில், பாலதக்ஷ மாவத்தையில் கட்டப்பட்டுவரும் மேம்பாலம், பழைய கொம்பனிய வீதி பொலிஸ் தலைமையகத்தினூடாக கட்ட திட்டமிடப்பட் டுள்ளது. அதற்காக 6 முக்கியமான நிறுவனங்களின் கட்டடங்கள் இடிக்கப்படவேண்டியிருந்தது. இந்தத் திட்டம் சுமார் 2 ஆண்டுகள் காலதாமதமாகியுள்ளது-என்றார். (எ-இ)

## ஜப்பான் செல்லவுள்ள ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, ஏப்.30

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாம் பயணத்துக்குப் பின்னர், ஜப்பான் செல்லவுள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிப்படுத்தியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதி எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதிவரை வியட்நாம் செல்கின்றார். அதன்போதும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும். அடுத்த சில மாதங்களுக்குள் ஜப்பான் செல்லவுள்ளார். அப்போதும் சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படக் கூடும்-என்றார். (எ-44)




ஏ.எல்.ரிசல்ட் வந்த கலகலப்பு இன்னும் அடங்கேலை. இப்பவும் பேஸ்புக்கில நல்ல ரிசல்ட் எடுத்த பிள்ளையளுக்கு வாழ்த்துமழை பெய்தபடியேதான் இருக்குது. பிள்ளையளின்ர ரிசல்ட்டை,அப்பிடியே முழு விவரத்தோட பேஸ்புக்கில போடவேண்டாம் எண்டு பரீட்சைத் திணைக்களம் சொல்லியும்கூட எங்கட ஆக்கள் கேக்கிறபாடாயில்லை. அப்பிடி அவை சொல்லுறதுக்கும் காரணமிருக்கு. பேஸ்புக்கில வந்த ரிசல்ட் சீற்றை அப்பிடியே கொப்பி பண்ணி எடுத்து, அதில பேரை மட்டும் மாத்தி, தங்கட ரிசல்ட் மாதிரிக்காட்டி, கள்ளவேலையளுக்கு அதுகளைச் சிலர் பாவிச்சவை. அப்பிடியான ஆக்கள் பிடிபட்ட பிறகுதான்,இந்த ரிசல்ட் சீற்றை வைச்சு இப்பிடியெல்லாம் திருகுதாளங்கள் செய்யலாம் எண்டது தெரியவந்தது. அதுக்காகத்தான் அவையள் பேஸ்புக் மாதிரியான சமூக ஊடகங்களில் ரிசல்ட் சீற்றைப் போடவேண்டாம் எண்டு அட்வைஸ் பண்ணுகினம். அவை என்னதான் சொன்னாலும் அதெல்லாம் எங்கட ஆக்களுக்கு எருமை மாட்டில பெய்த மழைதான்.

இந்த ரிசல்ட் மழைக்குள்ள ஒரு விசயத்தை நீங்கள் கவனிச்சியளோ தெரியேலை. இந்த முறை கூடுதலா பயோ சயன்ஸ், மற்ஸ், கொமர்ஸ், ரெக்னோலொஜி எண்ட பாடங்களில பிள்ளையள் எடுத்த றிசல்ட்தான் கூட உலாவினது. உந்த ஆர்ட்ஸ் பாடத்தில '3ஏ' எடுத்த பிள்ளையளின்ர ரிசல்ட் வழக்கத்தை விடக் குறை வாத்தான் கண்ணில தட்டுப்பட்டது. ஏன் இப்பிடி எண்டு விசாரிச்சுப் பார்த்ததில இந்தமுறை ஆர்ட்ஸ்காரப் பிள்ளையள் கன பேருக்கு அவ்வளவு நல்ல ரிசல்ட் இல்லையாம் எண்டு தகவல் கிடைச்சுது. அதாலதான் பேஸ்புக்கிலையும் ஆர்ட்ஸ்காரரின்ர ரிசல்ட் அவ்வளவா தென்படேலை.

ஏன் ஆர்ட்ஸ் பாடம் எடுத்த பிள்ளையளின்ர ரிசல்ட் இந்தமுறை குறைவு எண்டதுக்கு கனக்கக் காரணங்கள் இருக்காம். அதில முக்கியமானது ஓ.எல். எக்ஸாமில நல்ல ரிசல்ட் எடுத்தவையும், இயல்பாவே கெட்டித்தனம் உள்ளவையும் இப்ப ஆர்ட்ஸ்பாடம் எடுக்கிறது குறைவாம். நல்ல ரிசல்ட் எடுத்தவையில விதிவிலக்கான சிலர்தான் ஆர்ட்ஸ் பாடத்தை செலக்ட் பண்ணிப் படிக்கினம். அரும்பொட்டில ஓ.எல். பாஸ் பண்ணின பிள்ளையள்தான் கூடுதலா ஆர்ட்ஸ் எடுக்கினமாம். ஆர்ட்ஸ் படிச்சால் மதிப்பில்லை, வேலை எடுக்கிறது கஷ்டம், சம்பளம்கூட வராது எண்டதுக்காக 'பயோ படிச்சு எல்லாப் பாடமும் பெயிலானால் கூட பரவாயில்லை, ஆனால் ஆர்ட்ஸ் எடுக்கமாட்டம்' எண்ட மனோநிலையில தான் ஏ.எல். படிக்க வாறவை இருக்கினம். அவையின்ர பெற்றோருக்கும் அதே மன நிலைதான். இன்னும் நாலைஞ்சு வருசத்தில ஆர்ட்ஸ் எண்ட பாடமே இலங்கையில இருந்து இல்லாமல் போறதுக்கும் சான்ஸ் இருக்காம். போறபோக்கைப் பார்த்தால் அதைவிடக் கெதியா இல்லாமல் போடும் எண்டமாதிரித்தான் கிடக்குக் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரையும் நூல் அறிமுகமும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் தமிழியற் கழகம் நடத்தும் 'மலையக இலக்கியம்: ஒன்றரை நூற்றாண்டு வளர்ச்சி' என்னும் கருத்துரையும் நூல் அறிமுகமும் இன்று மாலை 3 மணியவில் நடைபெறவுள்ளது.
தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நித்தியானந்தனின் நூல்கள் பற்றிய கருத்துரைகளை சமூகவியல்துறை முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், தமிழ்த்துறை மாணவி ந.சுபாஷினி ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ம)


## கேள்வி அறிவித்தல்


## சாவகச்சேரி பிரதேசசபை

## சபைநிதி வேலைத்திட்டங்கள் கட்டம் II - 2025

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளரிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
விலைக்கேள்வியாளர்கள் பொது தொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவினை மேற்கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின வகுதி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு. மேலதிக தகைமைத் தேவைகளிற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் அட்டவணை (Schedule -5) வகுதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய .டத்தில் 2025.04.30 தொடக்கம் 2025.05.19 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளூராட்சி மன்ற பெறுகை குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2025.04.30 ஆம் திகதியிலிருந்து 2025.05.19 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 3,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2025.05.20 ஆம் திகதி மாலை 02:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2025.05.20) மாலை 2.00 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/C.F/2025/21-36 இலக்க வேலைகளுக்கு 77 நாட்கள் (2025.08.05) வரை செல்லுபடியாகும்
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி அல்லது எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2025.05.09 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C.F/2025/21 | பொது நூலக புனரமைப்பு, கச்சாய் கட்டம் II | 8.35 | 84 | C7 or above (கட்டட நிர்மாணம்) | 84,000.00 | 2025.05.20-2025.09.03 வரை |
| 2 | NP/14/41/(6)/2/C.F/2025/22,23,24 | கோட்டையடி பாதாளவைரவர் கோவில் முன் வீதி புனரமைப்பு, கச்சாய்<br>தவசிகுளம் கண்ணகை அம்மன் கோவில் பின் வீதி புனரமைப்பு, தவசிகுளம்<br>சந்தை பின் வீதி 2வது வீதி புனரமைப்பு, கொடிகாமம் | 9.43 | 84 | C7 or above (வீதி நிர்மாணம்) | 95,000.00 | 2025.05.20-2025.09.03 வரை |
| 3 | NP/14/41(6)/2/C.F/2025/25,26,27 | உசன் வயலோர வீதி புனரமைப்பு, உசன்<br>பழைய வாய்க்கால் வீதி புனரமைப்பு, மிருசுவில் தெற்கு<br>அல்லாரை வெள்ளாம்போக்கட்டி ஊரெல்லை வீதி 7வது வீதி புனரமைப்பு, கொடிகாமம் | 9.30 | 84 | C7 or above (வீதி நிர்மாணம்) | 94,000.00 | 2025.05.20-2025.09.03 வரை |
| 4 | NP/14/41/(6)/2/C.F/2025/28,29,30 | முத்துக்குமாரசாமி வீதி புனரமைப்பு, கைதடி<br>கொற்றங்குடை 5வது குறுக்கு வீதி புனரமைப்பு (இலகடி வீதி), கைதடி<br>நவீல்ட் பாடசாலை வீதி புனரமைப்பு, கைதடி | 9.38 | 84 | C7 or above (வீதி நிர்மாணம்) | 94,000.00 | 2025.05.20-2025.09.03 வரை |
| 5 | NP/14/41/(6)/2/C.F/2025/31,32,33 | ஆழ்வார்மட வீதி புனரமைப்பு, வரணி<br>அம்மாகடை 1வது குறுக்கு வீதி புனரமைப்பு, வரணி<br>இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியவித்தியாலய வீதி புனரமைப்பு, வரணி | 6.76 | 84 | C7 or above (வீதி நிர்மாணம்) | 68,000.00 | 2025.05.20-2025.09.03 வரை |
| 6 | NP/14/41/(6)/2/C.F/2025/34,35,36 | சிமிள் கண்ணகை அம்மன் கோவில் வீதி புனரமைப்பு, வரணி<br>கும்பிட்டான்புல கோவில் பின் வீதி புனரமைப்பு, வரணி<br>மாசேரி இடைக்குறிச்சி ஊரெல்லை வீதி புனரமைப்பு, வரணி | 8.45 | 84 | C7 or above (வீதி நிர்மாணம்) | 85,000.00 | 2025.05.20-2025.09.03 வரை |

2025.04.30
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை.

# டெல்லியை தோற்கடித்து உயிர்ப்புடன் கொல்கத்தா!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியைத் தோற்கடித்துத் தொடரில் தனது இருப்பைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது கொல்கத்தா.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 9 விக்கெட்டுகளை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரகுவன்ஷி 44 ஓட்டங்களையும், ரிங்கு சிங் 36 ஓட்டங்களையும், நரைன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஸ்ராக் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.
பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து 14 ஓட்டங்களால் கொல்கத்தா வெற்றிபெற்றது.
இந்த ஆட்டத்தில் கொல்கத்தா தோல்வியடைந்திருந்தார், அந்த அணி பிளேஓவ் சுற்றுக்குச் செல்வது கடினமாக மாறியிருக்கும். வெற்றிபெற்ற காரணத்தால் கொல்கத்தாவுக்குத் தொடர்ந்தும் வாய்ப்புக்கள் உள்ளன. (ம)


## மணமகள் தேவை

1) கொல்லன்கலட்டி, இந்து, 1991, கௌரவகுலம் (V), அனுஷம் MSC, Denmark, citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2) காரைநகர் - நவாலி, இந்து, 1992, கௌரவகுலம் (V), சுவாதி, Bachelor, Newzerland + Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3) காரைநகர், இந்து, 1988, கௌரவகுலம் (V), உத்திரட்டாதி Bsc (Hons) மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4) சுதுமலை, இந்து, 1989, கௌரவகுலம் (V), உத்தரம் Senior Software Engineer, USA, citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5) நல்லூர், இந்து, 1987, விஸ்வகுலம், அத்தம், BA (hons) Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6) Jaffna town, இந்து, 1991, விஸ்வகுலம், உத்தரம், CIMA Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7) கரம்பன், இந்து, 1992, விஸ்வகுலம், உத்தராடம், BSC மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8) உடுப்பிட்டி, பருத்திதுறை, இந்து, 1990, கௌரவகுலம் (K), திருவோணம், HNDA, USA citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9) சுன்னாகம் - தெல்லிப்பளை, இந்து, 1992, கௌரவகுலம் (K), ரேவதி, Civil Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10) காங்கேசன்துறை, மாவிட்டபுரம், இந்து, 1988, கௌரவகுலம் (K), ரோகினி, MSC, in Computer Science, France citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

S . Sharma J . P
WWW . thaalee . com
போன் :- 0775393728
Whats app :- 0778038193


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். அருகில் இருக்கும் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாகஇருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். வியாபாரத்தில் பிற்பகலுக்குமேல் பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**மிதுனம்:** தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் குறைவாகவே கிடைக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வாழ்க்கைத்துணைவழியில்செலவுகள் ஏற்படும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும். உணவுவகைகளால் அலர்ஜி ஏற்படும் என்பதால் கவனம் தேவை.

**கன்னி:** உற்சாகமாகச் செயல்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவை களை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். வாழ்க்கைத் துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**துலாம்:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர் பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களிடம் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**தனுசு:** சகோதரர்கள்வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கும்பம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிஇருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.





## நீதி வழங்குமாறு கோரி கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.30

நயினாதீவு இறங்குதுறையில் மணல் ஏற்றி இறக்கும் தொழிலில் ஈடுபடுவர்கள் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்டுனெடுத்தனர்.

சில தினங்களுக்கு முன்னர், இறங்குதுறையில் மணல் ஏற்றி இறக்கும் தொழிலாளர்களுக்கும், தொழில் வழங்குநபருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியிருந்தது. இது தொடர்பில் இரு தரப்பினரும் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். தற்போது தொழிலாளர் தரப்பைச்சேர்ந்த 8 பேர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் பக்கச்சார்பாக நடக்கின்றனர் என்றும், தங்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்றும் கோரியே ஊர்காவற்றுறை இறங்குதுறையில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-27)

## குருதிக்கொடை

சாவகச்சேரி ஏப். 30

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இறைபதமடைந்த உதவிப் பிரதேச செயலர் திருமதி தமிழினி சதீஸின் நினைவாக பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலக மண்டபத்தில் குருதிக்கொடை நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் மதியம் 12 வரை நடைபெறவுள்ளது. (ச-25, 9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30

வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் தெல்லிப்பழை அரிமா கழக மண்டபத்தில் எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அங்கத்தவர் பிரேரணைகள் தர விரும்பின் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக திருமதி உஷா நாகராசா, காங்கேசன்துறை வீதி, எட்டாம் கட்டை , மல்லாகம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. இரதோற்சவத் திருவிழா மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாள் 12 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெற்று மஹோற்சவம் நிறைவுபெறும். (ச-26)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.30

அச்சுவேலி வடக்கு(சராசாளி) அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர்தேவஸ்ஸ்தானத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 10 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 12ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுங்காவனத்திருவிழாவும் திருக்கல்யாணமும் நடைபெறுமென ஆலயத்தின் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

## ஆசிரியர் சங்கத்தின் மேதினப் பேரணி

யாழ்ப்பாணம், ஏப்.30

இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புகள் ஆகியன இணைந்து உழைப்பாளர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளன.

ஆசிரியர் மற்றும் அத்துறைசார் தரப்பினரது ஊதியம் அதிகரிப்பு, கல்வித்துறையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது, மக்களின் காணி நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த மே தினப் பேரணி நாளை றுதினம் முதலாம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளது. யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள குறித்த மேதினப் பேரணி, யாழ். நகரின் பிரதான சாலைகளூடாக பேரணியாக சென்று யாழ் பொது நூலகம் முன்பாக ஒன்று கூடி பேரணிக் கூட்டம் நடைபெறவுள்ளது. குறித்த பேரணியில் அனைத்து துறைசார் தரப்பினரும் ஆதரவை வழங்கி குறித்த பேரணியை வலுப்படுத்துவது அவசியம் என்றும் ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (ச-125)

## தேங்காய் விலையுயர்வு

கொழும்பு, ஏப் 30

இலங்கையில் தேங்காயின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக தென்னைப் பயிர் செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

180 ரூபாவுக்கு விற்கப்பட்ட தேங்காய், தற்போது 220 ரூபாய் முதல் 240 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## குருபூஜையும் சிறப்புரையும்

யாழ்ப்பாணம்,ஏப். 30

சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வேலுப்பிள்ளை சிவகுருநாதன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் 'பழமையைப் பேணல்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத்துறைத்தலைவர் கலாநிதி. பொன்னுத்துரை சந்திரசேகரம் சிறப்புரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து செல்லப்பா சுவாமிகளின் குருபூஜை வழிபாடு சிவபுராணம் ஓதலுடன் நடைபெற்றது. (ச-22,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## உப்பில்லா நாடு குப்பையிலே..!

கறி உப்புக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக அதன் விலை சடுதியாக அதிகரித்திருக்கின்றது. அன்றாட உணவுப் பழக்கத்தில் தவிர்க்கமுடியாத ஒன்றான உப்பு, தற்போது ஒரு கிலோ 360 ரூபாவரையில் விற்கப்படுகின்றது என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். தேங்காய், புளி, முட்டை, அரிசி என்ற தட்டுப்பாட்டு வரிசையில் இப்போது உப்பும் சேர்ந்திருக்கின்றது. வழக்கம் போன்று தற்போதைய அரசாங் கம் தட்டுப்பாட்டுக்குக் காரணங்களை அடுக்குகின் றதே தவிர, உப்புத்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வ தற்கு எந்த நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

கடந்தகால அரசாங்கங்களின் காலத்தில் இறக்குமதிப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர்தான் உள்நாட்டில் விளையும் - மக்கள் நித்தமும் பயன்படுத்தும் - உணவுப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. தேங்காய், அரிசி, புளி, முட்டை , உப்பு என்பவற்றின் விலைகள் மடங்குகளில் அதிகரித்திருக்கின்றன. ஒவ்வொரு குடும்பங்களும் அன்றாடம் பயன்படுத்தும்- தவிர்க்கமுடியாத இப்பொருள்களின் விலை உயர்வு நிச்சயம் அந்தக் குடும்பங்களின் வாழ்க்கைச் செலவில் தாக்கம் செலுத்தும். நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக செலவுக்கேற்ற வருமானம் இன்றித் திண்டாட்டத்தில் இருக்கும் மக்களுக்கு, இந்த விலையேற்றங்கள் நிச்சயம் பெருத்த அடியாகவே இருக்கும்.

விலையேற்றங்களுக்குக் காரணம் கூறுவதுடன் கடமை முடிந்துவிட்டது என்ற போக்கிலேயே அரசாங்கம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அரசாங்கம் கூறினாலும் தேங்காய், புளி ஆகியவற்றின் விலைகள் இன்னமும் குறைந்தபாடாக இல்லை. தற்போது ஏற்பட்டுள்ள உப்புத் தட்டுப்பாட்டுக்கு, மழையுடன் கூடிய கால நிலையைக் காரணமாகக் கூறினாலும், அது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. உப்பு இருப்பைப் பேண வேண்டியதும், உள்நாட்டின் உற்பத்தி பற்றாக்குறையாக இருந்தால் இறக்குமதிகள் மூலம் அதை ஈடுசெய்ய வேண்டியதும் அரசாங்கமே. உப்பு விடயத்தில் மட்டுமல்ல, மக்களின் அன்றாடப் பயன்பாட்டுக்கான பொருள்களின் இருப்பை அரசாங்கம் தக்கவைத்திருப்பது அவசியம். ஆனால் அவற்றை இறக்குமதி செய்வதற்கு தயக்கம் காட்டும் அரசாங்கம் - நிதிப்பற்றாக்குறையைக் காரணம் காட்டும் அரசாங்கம் வாகன இறக்குமதிக்கு அனுமதித்திருப்பது வேடிக்கையானது.


உப்பு, தேங்காய், புளி போன்ற பொருள்களின் விலையேற்றத்தால் செல்வந்தர்கள் பாதிக்கப்படப் போவதில்லை. சாதாரண மக்களே பாதிப்புக்குள்ளாகின்றனர். இவற்றின் விலையேற்றங்கள் சாதாரண பல குடும்பங்களை நிச்சயம் வறுமைக்குள் தள்ளும். அரசாங்கம் காரணங்களைக் கூறிக்கொண்டிருக்காது, இவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பது அவசியம். உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அது உடனடியாகச் சாத்தியமற்ற சந்தர்ப்பத்தில் இறக்குமதிகள் மூலம் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இறக்குமதித் தீர்மானத்தால் எதிர்க்கட்சிகளின் வாய்களுக்குள் சிக்கிவிடுவோமோ என்று அச்சப்படாமல், மக்களின் நலன்சார்ந்த தீர்மானங்களை அரசாங்கம் எடுக்கவேண்டும். பொருளாதார நெருக்கடி நிலைமையால் ஏற்கனவே சுமையுடன் இருக்கும் சாதாரண மக்களை வருத்தாது, இந்த விலையேற்றங்களை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். இல்லையேல் இந்த அரசாங்கம் குப்பைத்தொட்டிக்குள் செல்வதற்கு உப்பும் ஒரு காரணமாகிவிடும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும், உன் உழைப்பால் நீ எண்ணியது உன்னை வந்து சேரும். நீ நீயாக இரு.

–அப்துல் கலாம்–



## பொருளாதாரக் கணக்கெடுப்பு அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, ஏப்ரல் 30**

**2025 ஆம் ஆண்டில் விவசாய நடவடிக்கைகள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் விவசாயம் சாராத நடவடிக்கைகளை உள்ளடக்கிய பொருளாதாரக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை கடைசியாக 2013/14 ஆம் ஆண்டில் பொருளாதாரக் கணக்கெடுப்பை நடத்தியிருந்தது.

2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் பொருளாதார கணக்கெடுப்பை நடத்தவும், விவசாயம் மற்றும் விவசாயம் சாராத பொருளாதார நடவடிக்கைகளை இரண்டு தனித்தனி கட்டங்களாக நடத்தவும், அந்தக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் புதுப்பிக்கவும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை திட்டமிட்டுள்ளது.

இதன்பிரகாரம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி சமர்ப்பித்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ச-இ)




## பேருந்துகள் விபத்து 30 பேர் படுகாயம்

கொழும்பு, ஏப்ரல் 30

பெலியத்த பொலிஸ் பிரிவின் ஹெட்டியாராச்சி வளைவில் தனியார் பேருந்தும் இலங்கை போக்குவரத்துசபைப் பேருந்தும் நேருக்கு நேர் மோதி நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் சுமார் 30 பேர் காயமடைந்து பெலியத்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## தேர்தல் பரப்புரையில் படம்; தடுக்கக்கோரும் சந்திரிகா!

கொழும்பு, ஏப்.30

தனது பெயர் மற்றும் படங்களை தேர்தல் பரப்புரைகளில் பயன்படுத்துவதைத் தடுக்கக்கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் தனது படம் மற்றும் பெயர் அனுமதியின்றிப் பயன்படுத்தப்படுகின்றது என்றும், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (எ-இ)

## பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 30

பாணந்துறையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறையிலுள்ள ஹிரணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு குறித்த துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## தேசபந்துவை நீக்குவதற்கு பொலிஸ்குழு நியமனம்!

கொழும்பு, ஏப்.30

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தும் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கப் பொலிஸ் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்குழு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் மூன்றாவது தடவையாகவும் கூடியபோது நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் விசாரணைக்குழுவின் ஒத்துழைப்புடன் எதிர்கால விசாரணைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் கூடுவதற்கு இந்த விசாரணைக்குழு தீர்மானித்தது. (ச-44)

நாளை

வியாழக்கிழமை -சித்திரை 18

01.05.2025

சுபநேரம் : 07.27 - 08.57

ராகுகாலம் : 01.27 - 02.57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தாண்டின் இறுதியில் வரிசையுகம் உருவாகும்

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30

**நாட்டில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரிசையுகம் மீண்டும் தோற்றம்பெறும். அப்போது முழுநாடும் ரணில் விக்கிரமசிங்கவைத் தேடும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி உள்ளிட்ட ஆளுங்கட்சியினர் எதிர்க்கட்சித் தலைவரை விமர்சிப்பதில்லை. அவர் அப்பதவியில் இருப்பதை ஆளுங்கட்சி விரும்புகின்றது. ஆனால் ரணில் விக்கிரம சிங்கவை இலக்குவைத்தே ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் விமர்சனக் கணைகளைத் தொடுத்துவருகின்றனர்.

கிராமப்பகுதிகளில் உள்ள ஜே.வி.பி.யினரும் ரணிலையே விளாசித் தள்ளுகின்றனர். ஏனெனில் ரணில் வந்துவிடுவார் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது.

மே மாதம் வரும்போது பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்க ஆரம்பிக்கும். ஓகஸ்டில் உக்கிரமடையும். டிசெம்பர் மாதமளவில் வரிசைகள் தோற்றம்பெறும்.

அப்போது நாட்டை மீட்டு, எங்களை பாதுகாக்கவும் என முழு நாடும் ரணிலிடம் கோரிக்கை விடுக்கும்- என்றார். (ச-44)

# தே.ம.சக்தியை வீழ்த்தமுடியாது

## நீதியமைச்சர் இறுமாப்பு



கொழும்பு, ஏப்.30

இலங்கையில் தற்போதுள்ள எதிர்க்கட்சிகளால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வீழ்த்தமுடியாது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாவார் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அறிவித்துவருகின்றமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் தற்போது உண்மையான எதிர்க்கட்சி இல்லை. அரசாங்கத்தையும் விமர்சிப்பதற்கு எதுவும் இல்லை. அதனால்தான் இப்படியான நகைச்சுவைத்தனமான கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

நாட்டில் தற்போதுள்ள எதிரணிகளால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வீழ்த்தமுடியாது. புதிதாக எதிர்க்கட்சியொன்று வரவேண்டும். அக்கட்சி தேசிய மக்கள் சக்தியைவிட சிறப்பாக செயற்படவேண்டும்-என்றார். (ச-44)



# வடக்குத் தொழிற்சங்கங்களின் மாபெரும் மேதினப் பேரணி

யாழ்ப்பாணம், ஏப்.30

வடக்கு மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தால் மேதினப் பேரணி எதிர்வரும் முதலாம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

நல்லூர் முன்றலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் குறித்த எழுச்சிப் பேரணியானது ஆரியகுளம் சந்தியைச் சென்றடைந்து ஸ்ரான்லி வீதியூடாக யாழ். நகரைச் சென்றடைந்து அதன் பின் யாழ்.மாவட்டச் செயலகம் சென்றடைந்து அங்குள்ள தனியார் விருந்தினர் மண்டபத்தில் பேரணிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தொழிற்சங்கங்களின் ஒருமித்த ஆதரவுடன் ஆட்சிபீடத்தைப் பெற்றுக்கொண்ட இன்றைய அநுர தலைமையிலான அரசும் கடந்தகால அரசுகள் போலவே எம்மைத் தமக்கான பொம்மைகளாகப் பயன்படுத்த முனைகின்றது என்றும் இம்முறை 12 தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன் குறித்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் குறித்த சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ச-125)

# இளைஞன் கொலை; ஐவருக்கு மரணதண்டனை

கொழும்பு, ஏப்ரல் 30

கொலைச்சம்பவம் தொடர்பான குற்றத்துக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று ஐந்து பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளது. மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் இருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கொலை நடந்த சமயத்தில் அவர்கள் 18 வயதுக்குக் குறைவானவர்களாக இருந்ததால் அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மட்டக்குளியில் உள்ள கோவிலுக்கு அருகில் ஏற்பட்ட மோதலில் 21 வயது இளைஞன் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேடு பேக்கரிக்குத் தண்டம்

கிளிநொச்சி, ஏப்.30

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட மலையாளபுரத்தில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய பேக்கரியொன்றுக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ. டனாத் தலைமையிலான குழுவினரால் உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன. இதன்போது பேக்கரியொன்றில் திகதி காலாவதியான பொருள்கள் மற்றும் காலாவதியான பொருள்களுக்கு மீள்திகதி இடல் போன்ற குறைபாடுகள் உட்பட பல குறைபாடுகள் இனங்காணப்பட்டன.

அதனையடுத்து குறித்த பேக்கரி உரிமையாளருக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்ட வழக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கடுமையான எச்சரிக்கையுடன் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ச-26)

# அட்சய திருதியை செல்வத்தைப் பெருக்கும்



சித்திரை மாதம் வளர்பிறையில் வரும் திருதியை "அட்சய திருதியை" என்று அழைக்கப்படுகிறது. அட்சயம் என்றால் வளர்வது, பெருகுவது என்று அர்த்தம். அப்படியாக அட்சய திருதியை அன்று, நாம் என்ன பொருள் வாங்கினாலும் அந்தப் பொருள் மிகவும் பெருகி வளம் சேர்க்கும். குறைவில்லாத செல்வத்தை அள்ளித்தரும் திருநாளாக அட்சய திருதியை போற்றப்படுகிறது.

## சிறப்புகள்

தர்மர் சூரியபகவானை வேண்டி மணிமேகலை அட்சய பாத்திரம் பெற்றதும், சிவபெருமான் அன்னபூரணித் தாயாரிடம் தனது பிச்சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்றதும் இந்தநாளில் தான். பகவான் பரசுராமர் அவதரித்த நாள், புனித நதி கங்கை பூமியைத் தொட்ட நாள், குசேலர் கிருஷ்ண பகவானை சந்தித்த நாள், ஆதி சங்கரர் செல்வத்தை கொட்டிக்கொடுக்கும் ஸ்லோகமாகிய கனகதாரா ஸ்தோத்திரத்தை இயற்றிய நாள், குபேரன் இழந்த செல்வங்களை மீட்ட நாள், திரேதா யுகம் ஆரம்பமான நாள், வியாசர் மஹாபாரதம் எழுத ஆரம்பித்த நாளும் இதுவே.

இந்தநாளில் தங்கம் மட்டும் வாங்காமல் உப்பு, அரிசி, ஆடைகள் மற்றும் விலை உயர்ந்த எந்த ஒரு பொருளை வாங்கினாலும் அது பலமடங்கு பெருகும் என்பது ஐதீகம். அன்றைய தினத்தில் புதிய தொழில் தொடங்கலாம். பூமி பூஜை செய்வதற்கு உகந்த நாள். ஏழைகளுக்குத் தானம் செய்யலாம். பிதுர்க்களுக்கு தர்ப்பணம் செய்யலாம். அப்படி செய்வதன் மூலம் அவர்களது ஆசீர்வாதம் பெற்றுச் சிறப்பாக வாழலாம்.

## விரதம் இருக்கும் முறை

அட்சய திருதியை நாளன்று விடியும் முன் எழுந்து சுத்தமாக நீராடி, பூஜை அறையை சுத்தம்செய்து விளக்கேற்றி கோலம் போட்டு அதன் மீது ஒரு பலகையை வைக்கவும்.

பின்னர் பலகையின் மீது கோலம் போட்டு ஒரு சொம்பில் சந்தன கும்குமம் இட்டு அதில் நீரை நிரப்பி அதன் மீது பெரிய தேங்காயை வைத்து மாவிலைகளை அதனைச் சுற்றி அடுக்கி கலசம் போல் தயார் செய்ய வேண்டும். பின் அந்தக் கலசத்தின் அருகில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து, அதன் அருகில் புதிதாக வாங்கிய பொன், பொருள்களை வைத்து, பூப் போட்டு பூஜை செய்யவேண்டும். பிறகு அதற்கு கற்பூர தீபாராதனை காட்டி வணங்கினால் வளமான செல்வம் பெருகும்.

அந்த நாளில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்யலாம். உணவு, வஸ்திரம் போன்றவற்றை தானமாக வழங்கலாம். பசுவுக்கு கீரை வகைகளை வழங்கலாம். இந்நாளில் அன்னதானம் செய்வது மிகப் பெரிய புண்ணியமாகக் கருதப்படுகிறது.

இந்த அட்சய திருதியை தினத்தன்று வெண்மை நிறப் பொருள்கள் விசேஷமானவை ஆகும். வெண்ணிற மல்லி பூ, வெண்பட்டு ஆடை, வெண்ணிறப் பால் பாயாசம் என்பவற்றைப் பயன்படுத்துதல் சிறப்பாகும். அட்சய திருதியை நாளில் தங்கம்தான் வாங்கவேண்டும் என்று நினைக்க வேண்டாம். வசதி உள்ளவர்கள் வாங்கலாம். வசதி இல்லாதவர்கள் உப்பு, மஞ்சள், நெல், அரிசி ஆகியவற்றை வாங்கி லட்சுமி படத்துக்கு முன் வைத்து வழிபடலாம். ■

குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசய திருநாளாம் "அட்ஷய திருதியை" 30.04.2025 ஆம் திகதி இத்திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை (கொழும்பில் யாழ் மைதிலி ஜுவல்லறியிலும் யாழ்ப்பாணத்தில் மைதிலி நகை மாடத்திலும்) வாங்கி மகிழுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
09 . 10 . 1962

உதிர்வு
11 . 05 . 2005

## அமரர் வாசுகி தயாளன்
## (வைத்திய கலாநிதி DAM)

இறைவனடி இணைந்து ஈர்பத்து வருடங்கள்
இன்னும் பசுமையாய் எம் இதயத்தில்
"வாசு" எனும் நாமம்
இசையாக எமை அணைக்கிறது
காலங்கள் கரைந்தாலும்
கண்ணே "வாசு" நீ என்றும் எம்முடன்

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## நடராசா அருணகிரிநாதன்
(ஓய்வுநிலை புகையிரத நிலைய பணியாளர்)

கலைநகர், வட்டுவடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட நடராசா அருணகிரிநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (28.04.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-நாகம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்புப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவஞானவதியாரின் அன்புக் கணவரும், சிவநடராஜா (பிரதி நிதியாளர்-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), நிர்மலா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-காரைநகர் பிரதேசசபை), இராமேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற கதிரழகன் ஆகியோரின் அன்புத்தந்தையும் அனிந்தினி (ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), விஜேந்திரன் (ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், பரமநாதர் மற்றும் யோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராணி, குகநாயகி, அம்பலவாணபிள்ளை, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரியம்மா, நாகம்மையார் மற்றும் சிவகாமியம்மையார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபானுஜன், பவனுஜா, வைசிகன், வர்ணிகா, விதுன், சுவேதனா, துஸானா, ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2025) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்.
சிவநடராஜா-0094 77 308 1263
நிர்மலா-0094 77 935 3148
இராமேஸ்வரன்-0044 74 24769855

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 - 06 - 1951

மறைவு
28 - 04 - 2025



## சின்னத்துரை - தங்கராஜா (JP)

**யாழ் பல்கலைக்கழகம் முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்**


கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கராஜா அவர்கள் (28.04.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார் அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம்-துரையம்மாவின் மருமகனும், விஜயராணியின் அன்புக்கணவரும் விஜயதர்சினி சசிகலா(பிரான்ஸ்), அகல்யா(கனடா), ஆரணி (முகாமைத்துவ உதவியாளர்-யாழ் பல்கழைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தகப்பனும், காலஞ்சென்ற சிவகுமார், பத்மசேகர்(பிரான்ஸ்) யுவனேசன்(கனடா), தர்மிலன்(கனடா) ஆகியோரின் மாமனாரும், கஸ்தூரி (யாழ் பல்கழைக்கழக மாணவி - நுண்கலைப்பீடம்) கிஷியந்தன், லக்ஸன், அபிசன் அக்சிகா, அபிரா, பானுஜன், தினேஜா ஆகியோரின பேரனும் இரத்தினம், அமரர் கமலபூரணி கனகமனி பிறைசூடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராணி, ஜெயராணி, சிவசுப்பிரமணியம் தவபாலன் (அமரர்) இந்திராணி, பத்மராணி, ஜொயபாலன், சண்முகபாலன் இராமலிங்கம், சண்முகநாதன், பாலசுப்பிரமணியம், மலர் ஆகியோரின் மைத்துணரும் ஆவார் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2025) வியாழக்கிழமை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்.
நாவலடி லேன்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

T P NO - 0761964959
0212221882

# 20ம் ஆண்டு நினைவஞ்சலி





திருமதி
## செல்வராசா சரஸ்வதி
தோற்றம் 12.10.1928
மறைவு 11.05.2005

அமரர்
## செல்வராசா சிவகுமார்
தோற்றம் 01.04.1960
மறைவு 09.06.2005

**திதி: திருதியை**

ஆண்டுகள் இருபது கடந்தாலும்
அமைதியின்றி வாழ்கின்றோம்
உங்கள் நினைவுகளுடன் என்றும்
எல்லோரையும் தவிக்கவிட்டு
இந்தப் பிரிவைத் தந்தது ஏனோ
உங்கள் நினைவுகளுடன்
இன்றுவரை வாடுகின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.

(CS/58122) J-1

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச, ஊழல் ஒழிப்புப்பிரிவு யாழ்.மாவட்டச் செயலகத்தில் திறப்பு


## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## 2025 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை (தபால் நிலைய வீதி) நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான இரண்டாவது மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் தபால் நிலைய வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கடையினை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-30.04.2025 – 20.05.2025 வரை (முற்பகல் 9.00 மணி தொடக்கம் பி.ப 02.00 மணி வரை அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-21.05.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 21.05.2025 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | கடை இல - 04 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 2 | இரண்டு கடைகள் இல - 06 | 2,000.00 | 52,800.00 | 22,000.00 | **5,280,000.00** |
| 3 | கடை இல - 07 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 4 | கடை இல - 08 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 5 | கடை இல - 09 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |

நிபந்தனைகள்:

1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2 கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள புதிய கடை இல....... என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 21.05.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3 கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

4 உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.

5 குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.

6 நீண்ட கால குத்தகை கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.

7 கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.

8 அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.

9 தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.

10 கேள்வித் தொகை எந்த சந்தர்ப்பத்திலும் சபையால் மீளளிக்கப்பட மாட்டாது.

11 சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்,மாற்றங்கள்,புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

12 தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

13 மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

14 சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

15 கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.
2025.04.30




யாழ்ப்பாணம், ஏப். 30

பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை முறையிடு வதற்கு உள்ளக அலுவல்கள் அலகு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் , பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த பிரிவின் இணைப்பாளராக யாழ்.மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு நிறுவனத்தின் ஊழலைத் தடுத்தல் ஒருமைப்பாட்டுக் கலாசாரத்தை வளர்த்தல், நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் நிறுவனத்தின் நடைமுறைகள் மற்றும் முடிவுகள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் அணுகுவதை உறுதிசெய்தலும் உள்ளிட்டவற்றை நோக்காகக் கொண்டு இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் தெரிவித்துள்ளார். (ச-33, 25,66,27)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

கொடிகாமம், ஏப்.30

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

தி.அபராஜிதன்(அதிபர்) தலைவராகவும், சி.நிமலன் செயலாளராகவும், திருமதி சுமதி நவரட்ணம் பொருளாளராகவும், சி.ஸ்ரீபாலகிருஷ்ணபிள்ளை (உப அதிபர்) உப தலைவராகவும், திருமதி இராஜ்குமார் உப செயலாளராகவும், சி.சுஜீபன் உப பொருளாளராகவும், க.கேதீஸ்வரன், தி.கணாளன், சு.விக்னரூ பன், செ.நிருஜன், ம.துஷாந்தன், திருமதி சி.கிருஷா, ந.ஸ்ரீரங்கநாதன், ந.திருவாசகன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-41-159)



## சுயேச்சை குழு–1 இன் தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், ஏப்.30

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் போட்டியிடும் சுயேட்சை குழு-1 இன் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. சுயேச்சை குழுவின் செயலாளர் இ.ஜங்கரன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்க அதனை சுயேச்சை குழுவின் முதன்மை வேட்பாளரான அ.ரஜீவன் பெற்றுக்கொண்டார். (ச-22,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/04
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below..
   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in GROUP A in Table below) and Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in GROUP B in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-04-30 To 2025-05-15 during 09:00 hrs and 15:00 hrs
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-04-30 To 2025-05-15 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-05-07 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 1.00 P.M on 2025-05-16 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group A | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/02/2025/07 | Package 01 * Construction of Madaththady veethy – Gnanavairavar Veethy Connecting Road | 18.62 | 89 | C6 or above (Highway) | 5,000.00 | 187,000.00 | 29.08.2025 | 77 |
| Group B | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/02/2025/08 | Package 02 * Construction Of Petrol Shed Opposite Lane,Kopay Center | 9.48 | 84 | C7 or Above (Highway) | 3,500.00 | 95,000.00 | 29.08.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council/02/2025/09 | Package 03 * Construction of Pootharmadam 1st Lane,Kopay | 9.26 | 84 | C7 or Above (Highway) | 3,500.00 | 93,000.00 | 29.08.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council/02/2025/10 | Package 04 * Construction of Market Veethy 1 st Lane ,Avarangal West * Reconstruction of Datchu Road wellawakkal Veethy at Atchuvely, * Reconstruction Of Ampalavanar Sithivinayagar Veethy at Thampalai | 9.77 | 84 | C7 or Above (Highway) | 3,500.00 | 98,000.00 | 29.08.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council/02/2025/11 | Package 05 * Reconstruction of Mahilady Veethy,Kopay * Construction Of Lingapillayar Kovil Veethy,Kopay South * Construction of Kiralee Veethy,Puttur East *Construction Of Kalyanakula Veethy at Irupalai East | 9.00 | 84 | C7 or Above (Highway) | 3,500.00 | 90,000.00 | 29.08.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council/02/2025/12 | Package 06 *Reconstruction of Sivapoothanatheswarar Kovil Veethy,Neervely | 6.04 | 84 | C7 or Above (Highway) | 3,000.00 | 61,000.00 | 29.08.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council/02/2025/13 | Package 07 *Construction of Kaddumalai Kandasamy Kovil Veethy Drainge Atchuvely | 2.61 | 84 | C8 or above (Highway) | 2,000.00 | 27,000.00 | 01.08.2025 | 49 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur . 30.04.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தராகி சிவராம், ரஜிவர்மனுக்கு வடமராட்சியில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப். 30

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ். வடமராட்சி ஊடக இல்லச் செயலாளர் இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமராட்சி ஊடக இல்லத்தலைவர் கு.மகாலிங்கம் உட்பட ஊடக இல்லத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர். (ச-25,27,100)



# தராகி சிவராமுக்கு மன்னாரில் அஞ்சலி

மன்னார், ஏப். 30

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஸ்,தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா உட்பட கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-25, 56)



# கயிறு இழுத்தல் போட்டியில் வீனஸ் பெண்கள் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.30

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாவட்டமட்ட கயிறு இழுத்தல் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து தெரிவாகிய வீனஸ் கழக பெண்கள் அணி வெற்றியீட்டியது.

எதிர்வரும் மே மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-33-23)

கனடாவில்

## நான்காவது தடவையாக ஆட்சியமைத்தது லிபரல்

கனேடிய நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், லிபரல் கட்சியினர் மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ளனர். இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக நான்காவது தடவையாக லிபரல்கள் அங்கு ஆட்சியமைத்துள்ளனர்.
லிபரல் கட்சிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் பெரும் சரிவொன்று ஏற்பட்டிருந்தது. இதையடுத்து கன்சர்வேடிவ் கட்சிக்கு மக்கள் மத்தியில் சடுதியான ஆதரவு அதிகரித்தது. இந்த நிலையில், கட்சித் தலைமைப் பதவியில் இருந்து முன்னாள் பிரதமர் ட்ரூடோ விலக, கனேடிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கார்னி லிபரல் கட்சிக்குத் தலைமையேற்றார்.
அவரின் தலைமைத்துவத்தின் கீழேயே லிபரல் கட்சியினர் அபார வெற்றியைப்பெற்று 4ஆவது தடவையாக ஆட்சியமைப்பதை உறுதிசெய்துள்ளனர். இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொண்ட முதலாவது நாடாக கனடா அறியப்படுகின்றது. அது லிபரல் கட்சியின் கடந்த ஆட்சியிலேயே இடம்பெற்றது. (ம)

### சட்டமா...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கமையவே, ஜனாதிபதி அலுவலகத்தால் இதற்குரிய நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நிலவிய 1988ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில், பியகம பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளுக்குள் சட்டவிரோதமான முறையில் இளைஞர்கள் தடுத்துவைத்து சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்டதுடன், பலர் காணாமலாக்கப்பட்டனர். இதுதொடர்பில் விசாரணை நடத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் காண்பதற்காக 1995ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்காவால், ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.
1998ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி மேற்படி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சந்திரிக்காவிடம் கையளிக்கப்பட்டது. அதன்பின்னர் இது விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பரிந்துரைகளும் அமுலாக்கப்படவில்லை.
தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பட்டலந்த விவகாரம் மீண்டும் பேசுபொருளானது. இதைத் தொடர்ந்து, பட்டலந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பில் ஒரு நாள் விவாதம் நடத்தப்பட்டு, மேலதிக நடவடிக்கைக்காக அந்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-44)

### இந்தியாவுடனான...

கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட விடயங்களை அரசாங்கம் இரகசியமாக வைத்துள்ளது என்று எதிரணிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அந்த ஒப்பந்தங்கள் விரைவில் மக்களின் பார்வைக்காக வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, இந்திய ஒப்பந்தங்கள் விரைவில் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என்று அமைச்சர் நளிந்த கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் சில ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் புரிந்துணர்வு அடிப்படையில் இரு நாடுகளும் செயற்பட வேண்டும். தான்தோன்றித்தனமாக அவற்றைப் பகிரங்கப்படுத்தமுடியாது.
சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்திய பின்னர் நாடாளுமன்றத்தின் பார்வைக்காக அவை முன்வைக்கப்படும். இதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தங்களில் நாங்கள் கைச்சாத்திடவில்லை - என்றார். (அ-ம-44)

### காலி...

ரணில் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் தேர்தலில் போட்டியிடவில்லை. பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவதும் கிடையாது. ஓரிரு விளக்கமளிக்கும் கூட்டங்களில்தான் பங்கேற்று வருகின்றேன். அப்படியிருந்தும் ஊர் முழுதும் என்னைத்தான் ஆளுங்கட்சியினர் திட்டித்தீர்த்து வருகின்றனர். ஆனால், எதிர்க்கட்சித் தலைவரை பாராட்டுகின்றனர். இப்படியொரு தேர்தலை நான் கண்டதில்லை.
அதேபோல், மே முதலாம் திகதியன்று காலிமுகத்திடலில் பேரணியை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. காலிமுகத்திடலில் தேர்தல் பரப்புரைகளையோ அல்லது அரசியல் நிகழ்வுகளையோ நடத்துவதில்லை என்று கட்சிகள் அனைத்தும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தவறானது - என்றார். (அ-ம-44)

### மே 15ஆம்...

தெரிவித்தார். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சபையின் பிரதிநிதிகள், சட்டமருத்துவ அதிகாரிகள், பொலிஸார், என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிட்ட தரப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
புதைகுழியை அகழ்வதற்கான நிதி மத்திய அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், மே மாதம் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஆய்வுப் பணிகளை முன்னெடுத்த, மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார். ஆதலால், அவர் எதிர்வரும் 3ஆம் திகதியளவில் அங்கு ஆரம்பகட்டகள ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.
சிந்துப்பாத்தி மயானத்தில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட 40 சிதிலங்களில் இரண்டு சிதிலங்கள் விலங்குகளின் என்புகள், ஏனைய அனைத்தும் மனித என்புத் தொகுதிகளுடன் தொடர்புடையவை என்ற விடயம் ஏற்கனவே நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### கைப்பற்றப்பட்டது...

கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 39 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளும் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26-100)

### 500 கிலோ...

வலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே, மேற்படி மஞ்சள் பொதிகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் 25 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (அ-ம-26)

### இரு...

போட்டியிட்ட ஈழத் தமிழர்களான ஹரி ஆனந்தசங்கரி, யுவனிதா நாதன் மற்றும் இந்தியத் தமிழரான அனிதா ஆனந்த் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.
இதேவேளை, கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட நிரான் ஜெயநேசன், லியோனல் லோகநாதன் ஆகியோரும், பசுமைக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சருன் பாலரஞ்சனும் தோல்வியடைந்துள்ளனர். எனினும், அவர்களுக்கும் கணிசமான அளவுக்கு வாக்குகள் கிடைத்துள்ளன. (அ-ம)

### மே 3...

மே மாதம் 3ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் வேட்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டால் அது பாரதூரமான குற்றமாகக் கருதப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. (அ-ம)

### நிறைவுக்கு...

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட தபால்மூல வாக்களிப்பு நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளது. தபால் வாக்களிப்புக்கு மேலதிக நாள்கள் எவையும் ஒதுக்கப்படாது. அத்துடன், தபால் வாக்களிப்பைக்கோரி அதைப் பயன்படுத்தாதவர்களுக்கு வாக்குச் சாவடிகளில் வாக்களிக்கும் வாய்ப்பும் இருக்காது.
அஞ்சல் வாக்களிப்புக்காகக் குறித்தொதுக்கப்பட்ட திகதிகளில் முதல் நாளிலேயே 60 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் வாக்குகளைப் பதிவுசெய்தனர். ஒப்பீட்டளவில் வாக்களிப்பு வீதம் உயர்மட்டத்தில் பதிவாகியுள்ளது - என்றார். (அ-ம-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 08 . 1955



மறைவு
29 . 04 . 2025

**மாணிக்கம் சிவமூர்த்தி**

**(உரிமையாளர் - வீடியோ கலாமினி, அச்சுவேலி)**

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவமூர்த்தி இவர்கள் நேற்று (29.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், அன்னராசா - காலஞ்சென்ற கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மஞ்சுளாரஜனியின் அன்புக் கணவரும், கலைவாசன், கலைவாணி, கலைவரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
குடும்பத்தினர்
077 197 2252
(CS/30091) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாக் கட்டணத்தை அதிகரிப்போம்


## ஆஸி. தொழிற்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30
அவுஸ்திரேலியாவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தாங்கள் பதவிக்கு வந்தால் வெளிநாட்டு மாணவர்களுக்கான விசாக் கட்டணங்களை அதிகரிப்போம் என தொழிற்கட்சி அறிவித்துள்ளது.

தற்போது வெளிநாட்டு மாணவர்களிடம் 1600 டொலர் விசா கட்டணமாக அறவிடப்பட்டு வருகிறது இதனை 2000 டொலராக அதிகரிக்கப்போம்.

அதே போல் விண்ணப்பக் கட்டணத்தையும் அதிகரிக்கப்போம். எட்டு முன்னணி பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பக் கட்டணம் 5000 டொலராகவும் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்ப கட்டணம் 2500 டொலராகவும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் தொழிற்கட்சி தெரிவித்துள்ளது. (ச-6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 09 . 1947

மறைவு 27 . 04 . 2025

### தம்பிராசா சிவலோகநாதன்

கற்புலம் வீதி. உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சிவலோகநாதன் அவர்கள் கடந்த (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா-பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற முத்தையாப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் முத்துராணி அவர்களின் பாசமிகு கணவரும் சுரேஷ், மயூரன் (நெதர்லான்ட்), ஜனகன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபா, சஜீத்தா (நெதர்லான்ட்), நிவேதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வித்தியா, யாத்திரன் (நெதர்லான்ட்), யாஸ்னா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் சத்தியநாதன் (உரும்பிராய்), கமலாதேவி (உடுவில்), காலஞ்சென்ற சறோஜினிதேவி (கோப்பாய்), றுக்குமணிதேவி (லண்டன்), அருள்தேவி (லண்டன்), பவளராணி (உரும்பிராய்), தர்மராஜா (ஜேர்மனி), குணபூசணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் முத்துவேல்ராஜி (லண்டன்), சிவலிங்கராஜா (லண்டன்) காலஞ்சென்றவர்களான செல்வலிங்கராஜா, புஷ்பலிங்கராஜா, சண்முகலிங்கராஜா (ஜேர்மனி), சாந்தலிங்கராஜா (தெல்லிப்பளை), விக்னலிங்கராஜா (ஜேர்மனி), நித்தியகுமாரி (தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நெதர்லான்டில் 06.05.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்.
077 889 3628 (சகோதரன்)
021 223 1264 (சகோதரி)

தேவை
கொக்குவில் அமைந்துள்ள Food City க்கு பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 950 7546

TECHNO WORLD
TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD
A/L தொழிநுட்பப்பிரிவு
10 வது ஆண்டில் தடம்பதிக்கின்றது
A/L 2024 (Day Class)
ஆரம்பம்-02.05.2025
நேரம்-மாலை-02.30
வெலிங்டன் சந்தி,
பெருமாள் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
077 017 5346

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



01.05.2024 அன்று இறைபதமடைந்த

### அமரர். திருமதி றொசாறியோ ராணி பாக்கியநாதன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி நாளை 01.05.2025 வியாழக்கிழமை 11 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. கு. பாக்கியநாதன் (கணவன்)
அருள்மணி. திருமதி நிர்மலராஜன் (அ.ம.தி) 077 241 8647 (மகள்)
திருமதி அருள்ராஜன்-077 3733 480 (மகள்)
திருமதி கருணாராஜன் 076 2380837 (மகள்)
அல்பேட் பீரிஸ் (பிரான்ஸ்) - 0033651850594 (மருமகன்)
ஆன்ரனோ ஞானேஸ்வரன் (கனடா) - 0016474031441 (மருமகன்)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு

செல்வநாயகம் பிரதீபன் நினைவாக...



மண்ணில் 19 . 06 . 1983

விண்ணில் 10 . 05 . 2024

பலாலி தெற்கு வாசாவிளானைச் சேர்ந்த

### அமரர் செல்வநாயகம் பிரதீபன் (பிரபா)

(இலங்கை மின்சார சபை ஊழியர் - கிளிநொச்சி)

மூவருள் இரண்டாமவன் நீ
குருத்தெறிந்து நின்ற குமரப்பருவத்தில்
காக்கி உடையணிந்த காலன் உனை
நோக்கிவந்து மோத நொடிப்பொழுதில்
போய்விட்டாய்
விக்கித்து நின்றோம்
மீகாமன் இல்லாது
திக்குத்திசையறியாக் காலமானோம்
ஓராண்டல்ல இன்னும் ஓராயிரம் ஆண்டு
நீர்வரும் கண்ணில் நிழலாடுகின்றாய் நீ!

என்றும் உன் நினைவாக
தாயும் சகோதரர்களும்
காலானை, அச்சுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.